# ஈழத்து நவீன தமிழ்க் காவிய மரபில் முருகையனின் வகிபாகம்

**வே.ஞானசம்பந்தன், கி.விசாகரூபன்**

gnanynirue@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகில் நன்கு அறியப்பட்டவர் முருகையன். இவர் ஈழத்துத் தமிழ்ப் புலமைசார் மரபில் நவீன தமிழ்க் காவிய மரபிலும் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். ஈழத்து நவீன தமிழ்க் காவிய மரபில் முருகையனின் வகிபாகத்தைக் கண்டறிதலே இந்த ஆய்வின் முதன்மையான நோக்கமாகும். தமிழில் நவீன தமிழ்க் காவியங்களின் எழுச்சி, ஈழத்தில் நவீன தமிழ்க் காவியங்கள் தோற்றம் பெற்று வளர்ந்த நிலை, ஈழத்துத் தமிழ்க் காவிய மரபில் முருகையனின் முக்கியத்துவம் என்பனவற்றை இனங்காணல் துணை நோக்கங்களாகும். விவரண மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறையினூடாக இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அச்சில் வெளிவந்த முருகையனின் ‘தகனம்’(1962) ‘நெடும்பகல்’(1967), ‘ஆதி பகவன்’ (1978), ‘அது - அவர்கள்’ (1986), ஆகிய நான்கு நவீன தமிழ்க் காவியங்களும் முதல் நிலைத் தரவுகள் ஆகும். சமகாலத்தில் வாழ்ந்த ஏனைய புலமையாளர்களது நவீன தமிழ்க் காவியங்கள், ஈழத்து நவீன தமிழ்க் காவியங்களுடன் தொடர்புடையதாக இதுவரை வெளிவந்த ஆய்வு நிலை எழுத்துகள் முதலானவை இரண்டாம் நிலைத் தரவுகளாக அமைந்துள்ளன. யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்வயல் எனும் கிராமத்திற் பிறந்த இவரது குடும்பச் சூழல் இவருக்கு நிறைந்த தமிழறிவினைக் கொடுத்தது. சைவத்தமிழ் மரபும் புராணபடனச் சூழலும் இவரது ஆளுமை வளர்ச்சியின் பின்புலமாக அமைந்திருந்தன. இந்துக் கல்லூரியில் கற்ற காலத்தில் கைலாசபதியுடன் இவருக்கு உண்டான தொடர்பு, ஆங்கிலப்புலமை, மேலை நாட்டு இலக்கியப் பரிச்சயம், விஞ்ஞானப்புலமை போன்றன இவரது ஆளுமையினை மேலும் செழுமைப்படுத்தின. அத்துடன் பல்வேறுபட்ட பணிநிலைகளின் ஊடாகப் பெற்ற அனுபவம் இவருக்கு மேலும் பல உந்துதல்களை அளித்தன. முற்போக்குச் சிந்தனையுடைய முருகையன் நவீன காவியங்கள் மட்டுமன்றி கவிதை, பாநாடகம், திறனாய்வு, மொழி பெயர்ப்பு, கலைச் சொல்லாக்கம் போன்ற பல்வேறுபட்ட துறைகளில் சாதனைகளை நிலை நாட்டியுள்ளார். ஈழத்து நவீன தமிழ்க் காவிய மரபில் இவரது பங்களிப்புக் கனதியானது. தனது காவியங்களினூடு உலக உயிர்களின் தோற்றம், மனிதனின் சிந்தனை வளர்ச்சி, சமூகமாற்றம், சமூக விடுதலை, பொதுவுடைமைச் சித்தாந்தம், போன்றவற்றைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இந்த ஆய்வினூடே நவீன தமிழ்க் காவிய மரபில் புதிய உத்தி முறைகளைக் கையாண்டு புதுமைகள் நிகழ்த்தியவராகவும் ஏனைய படைப்பாளிகளிலிருந்து தனித்துத் தெரியும் ஆளுமையாகவும் முருகையனை இனங்காண முடிந்தது.

**திறவுச்சொற்கள்:** நவீன தமிழ்க் காவியங்கள், முருகையன், சமூக விடுதலை

## அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் படிநிலையில் நவீன தமிழ்க் காவியங்களின் எழுச்சி குறிப்பிடத் தக்கது. காவியம் எனும் போது பொதுவாக இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களையே நாம் மனம் கொள்கிறோம். இவ்வாறு தமிழில் மட்டுமின்றி உலகின் பல்வேறு மொழிகளில் ஒரு குறிப்பிடத்தக்க காலத்தில் காவியங்கள் தோன்றியிருப்பதை அறிய முடிகின்றது.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பும் அரசும் உச்சநிலையில் இருந்த சோழர் ஆட்சிக் காலத்தில் தமிழிற் பெருங்காவியங்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. காவியம் நிலப் பிரபுத்துவ சமூகத்துக்குரிய ஓர் இலக்கிய வடிவமாக எழுச்சி பெற்றிருக்கிறது. இவ்வாறு தோன்றிய காவியம் எனும் இலக்கிய வடிவம் சில பொதுப் பண்புகளைக் கொண்டுள்ளது. தண்டியலங்காரம் போன்ற அணி இலக்கண நூல்கள் இக்காவியத்திற்கான வரை விலக்கணங்களை வரையறை செய்துள்ளன. இத்தகைய பாரகாவியங்கள் எழுச்சி பெறும் சூழல் இன்றில்லை.

இலக்கிய வளர்ச்சிப் போக்கில் கால மாற்றத்தில் பழையன கழிதலும் புதியன புகுதலுமாக இலக்கிய வடிவங்களில் மாறுதல்கள் ஏற்பட்டன. இது உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் உண்டான மாறுதல் ஆகும். இந்த வகையில் பழைய காவிய வடிவத்தினின்று பெரிதும் வேறுபட்ட இருபதாம் நூற்றாண்டுக்குரிய புதிய காவிய வடிவம் ஒன்று தமிழிற் தோன்றி வளர லாயிற்று.

### நவீன தமிழ்க் காவியத்தின் பண்புகள்

நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியான பாரதியே நவீன தமிழ்க் காவியத்தின் முன்னோடியாகவும் விளங்குகின்றார். 1912 ஆம் ஆண்டில் பதிக்கப்பட்ட பாஞ்சாலி சபதம், குயிற்பாட்டு ஆகிய இரண்டும் நவீன காவியத்தின் முதன் முயற்சிகள் ஆகும். பாஞ்சாலி சபதத்துக்கு எழுதிய முன்னுரையில் பாரதியார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> “எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை யுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்தலே வேண்டும்.” (பாரதியார், 2001:371)

பாரதியின் கூற்றுப்படி மொழியின் எளிமையும் ஓசை எளிமையும் நவீன காவியத்தின் அடிப்படைகளாய் அமைந்திருக்கின்றன. ஆனால் பாரதியார் இவை மட்டுமன்றி தான் கூற வந்த விடயத்திலும் புதுமைகளைச் செய்திருக்கின்றார். பாரதியின் இவ்விதமான காவியங்கள், நவீன தமிழ்க் காவியத்தின் அடிப்படைப் பண்புகள் பலவற்றைக் கொண்டிருக்கின்றன. இவற்றை நோக்கும் போது இவை அனைத்தும் செய்யுள் நடையில் அமைந்திருத்தல், ஒரு குறிப்பிட்ட கதையினைக் கூறுதல், பழைய காவியங் களோடு ஒப்பிடுகையில் அளவிற் சிறிதாக இருத்தல், உள்ளடக்க - உருவ ரீதியாக எவ்விதமான வரையறைகளும் அற்றிருத்தல் போன்ற பண்புகளைக் கொண்டிருக்கின்றன. இத்தகைய பண்புகளைக் கொண்ட காவியங்களை ‘நவீன காவியங்கள்’ எனக் குறிப்பிட முடியும்.

இப்புதிய இலக்கிய வடிவமான நவீன காவியத்தைப் பல்வேறு சொற்பிரயோகங்கள் கொண்டு வழங்கி இருக்கின்றனர்.

இத்தகைய படைப்புகளை நெடுங்கவிதை, கதைப்பாடல், குறுங்காவியம், காவியக் கதை எனப் பலவாறு விமர்சகர்களும் படைப்பாளிகளும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இப்பெயர்களின் பொருத்தமற்ற தன்மையினை எடுத்துக்கூறி 'நவீன காவியங்கள்' என்று உரைப்பதே பொருத்தமானது என நு∴மான் (2021:232-233) விளக்கியுள்ளார்.

எனவே பழைய காவிய மரபிலிருந்து விலகி தனித்தன்மையுடைய சில பண்புகளைக் கொண்டு வளர்ச்சி பெற்று வந்த இந்த இலக்கிய வடிவத்தை 'நவீன காவியங்கள்' எனக் கூறுதல் பொருந்தும்.

**தமிழ் நாட்டில் நவீன தமிழ்க் காவியங்கள்**

முன்னர் குறிப்பிட்டது போல பாரதியாரைத் தொடர்ந்து பாரதிதாசன், ச.து.சு யோகியார், தேசிக விநாயகம்பிள்ளை, சுத்தானந்த பாரதியார், நாமக்கல் கவிஞர், கண்ணதாசன், சுரதா போன்றோர் தரத்திலும் பண்பிலும் வேறுபட்ட நவீன தமிழ்க் காவியங்களைப் படைத்துள்ளனர். ஆனால் இவையெல்லாம் ஏதோ ஒரு வகை கற்பனை உலகு சார்ந்த வையாகவே இருக்கின்றன. தமிழ் நாட்டில் தோன்றிய நவீன தமிழ்க் காவியங்களை அவற்றின் உள்ளடக்கம் கருதி மூன்று வகையாகப் பிரித்து நோக்குவர்.

1. பழந்தமிழ் இலக்கியக் கதைகளைக் கூறுவன:
   பாரதிதாசனின் 'கண்ணகி புரட்சிக் காப்பியம்', 'மணிமேகலை வெண்பா', கண்ணதாசனின் 'ஆட்டன் அத்தி' போன்றன.
2. அரச கற்பனைக் கதைகளைக் கூறுவன:
   பாரதிதாசனின் 'பாண்டியன் பரிசு' போன்றன
3. சமூகக் கற்பனைக் கதைகளைக் கூறுவன:
   பாரதிதாசனின் 'எதிர்பாராத முத்தம்' நாமக்கல் கவிஞரின் 'அவனும் அவளும்' போன்றன

ஈழத்து நவீன தமிழ்க் காவியங்களிலும் இத்தகைய பண்புகள் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் முற்றிலும் வேறுபட்ட காத்திரமான படைப் புகளும் காணப்படுகின்றன. நவீன என்ற அடைக்குரிய முழுப் பொருளையும் கொண்ட இத்தகைய படைப்புகள் சில ஈழத்திலேயே தோன்றியுள்ளன. (நு∴மான், 2021:234)

**ஈழத்தில் நவீன தமிழ்க் காவியங்கள்**

தமிழ் நாட்டில் தோன்றிய பாரகாவியங் களைப் போன்று ஈழத்தில் எதுவும் தோன்ற வில்லை. அத்தகைய காவிய மரபும் ஈழத்தில் இல்லை. சிலப்பதிகாரத்தைத் தழுவி எழுதப்பட்ட 'கண்ணகி வழக்குரை'யே ஈழத்தில் தோன்றிய காவியம் என கருதப்படுகிறது. 'ரகுவம்சம்' போன்ற மொழிபெயர்ப்புக் காவியங்களும் தோற்றம் பெற்றிருக்கின்றன. "ஈழத்து இலக்கிய மரபிலே காவியம் என்ற சொல் பொதுவாக பாடலை அல்லது செய்யுளையும் குறித்து நிற்கின்றது. மழைக்காவியம், மாணிக்க கங்கை காவியம் என்பன இதற்குத் தகுந்த உதாரணங்களாகும்" (நு∴மான்,2021:234). ஈழத்திலே ஒரு காவிய மரபோ ஒரு காவிய காலமோ இருந்திருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1950 ஆம் ஆண்டுகளில் இருந்து ஈழத்தில் நவீன தமிழ்க்காவியங்கள் தோற்றம் பெறுகின்றன. பேராசிரியர் க.கணபதிப் பிள்ளை முதல் எம்.எம்.ஏ.அனஸ் வரை பல்வேறு கவிஞர்கள் இத்துறையில் பல படைப்புக்களை வெளியிட்டுள்ளனர். தமிழ் நாட்டின் நவீன காவியப் போக்கில் அமைந்தனவும் அவற்றிலிருந்து வேறு பட்டனவுமாக பல காவியங்கள் ஈழத்தில் தோற்றம் பெற்றிருக்கின்றன.

சிலர் தங்கள் படைப்புகளில் சமகால பாத்திரங்களைக் கையாண்ட போதிலும் அவர்களை மனோரம்மிய காதல் உலகிலும் கருத்து உலகிலும் நடமாடவிட்டிருக் கின்றனர். "தேசிகவிநாயகம் பிள்ளையின் மருமக்கள் வழி மான்மியமும் அதை அடியொற்றி எழுந்த பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் சீதனக் காதையும் இப்பொது மரபுக்குப் புறம்பான முறையில் நடைமுறை வாழ்க்கை உண்மைகளுக்கு வடிவம் கொடுக்க முனைந்தன. எனினும் கவி மணியின் அதீத நொய்மையும் பேராசிரியரின் புதிய உள்ளடக்கத்துக்குப் பொருந்தாத பழைய மொழிநடையும் அவற்றின் இலக்கியத் தகைமையைப் பெரிதும் ஊறுபடுத்திவிட்டன." (நு∴மான், 2021:235)

1960 ஆம் ஆண்டின் பின்னர் ஈழத்தில் எழுந்த சில காவியங்கள் நவீன வாழ்க்கைப் பிரச்சினைகளையே தமது அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் முற்றிலும் நவீனத் தன்மை பெற்றிருப்பதனையும் காண முடிகின்றது. இந்த வகையில் ஈழத்து நவீன தமிழ்க் காவிய மரபில் புதிய பரிணாமத்தைக் கொடுத்தவர்களுள் மஹாகவி, முருகையன் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். மஹாகவியின் 'கண்மணியாள் காதை', 'ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்', 'கந்தப்ப சபதம்', 'கல்லழகி', 'சடங்கு' போன்றனவும் முருகையனின் 'ஆதிபகவன்', 'நெடும்பகல்', 'அது -அவர்கள்', மஹாகவியுடன் இணைந்து எழுதிய 'தகனம்' என்பனவும் குறிப்பிடத் தக்கன. இவை 'நவீன தமிழ்க் காவியங்கள்' என்று அழைக்கத்தக்க பண்பினை உடையன என நு∴மான் (2021:235) கூறுகின்றார். நீலாவணனின் காவியங்களும் இங்கு குறிப்பிடத்தக்கன. இவர்களைத் தொடர்ந்து பலர் இத்துறையில் ஈடுபாடு காட்டினர். நு∴மான், புதுவை இரத்தினதுரை, மதுரகவி, இ.நாகராஜன், மு.பொன்னம்பலம், சா.வே. பஞ்சாட்சரம், எம்.சி.சுபைர், பார்வதி நாதசிவம், காரை செ.சுந்தரம்பிள்ளை, வி. கந்தவனம், போன்றோரைக் குறிப்பிடலாம் (நாகேஸ்வரன்,1980:25).

ஈழத்து நவீன தமிழ்க் காவியங்களை கற்பனை உலகு சார்ந்தவை, நடைமுறை உலக சார்ந்தவை என இரு பெரும் பிரிவாகப் பகுத்து நோக்குவர். கற்பனை உலகு சார்ந்த காவியங்களை, அரச கற்பனைக் கதைகளை அல்லது வரலாற்றுக் கற்பனைக் கதைகளை உள்ளடக்கமாகக் கொண்டவை, காதற் கற்பனைக் கதைகளைக் கூறுபவை, விநோதக் கற்பனைப் புனைவுகள் என மூவகைப்படுத்துவர். நடைமுறை உலக சார்ந்த காவியங்கள், சமகால வாழ்க்கை பற்றிய பிரச்சினைகளை எடுத்துக் காட்டு கின்றன. இது ஈழத்துத் தமிழ்க் காவியங் களுக்கேயுரிய ஒரு தனிச் சிறப்பாகும். இவை குறித்து நு∴மான் (2021:236-238) விளக்கிக் கூறியுள்ளார்.

**முருகையனின் நவீன தமிழ்க் காவியங்கள்**

முருகையனின் படைப்பாற்றலை வெளிப் படுத்தும் இலக்கிய வடிவங்களில் நவீன காவியங்கள் குறிப்பிடத்தக்கவை. 'தகனம்' (மஹாகவியுடன் இணைந்து எழுதியது), 'நெடும்பகல்', 'ஆதிபகவன்', 'அது - அவர்கள்' எனும் நான்கு நவீன தமிழ்க் காவியங்களைப் படைத்துள்ளார்.

**தகனம்**

1962 இல் வெளிவந்தது 'தகனம்'. மஹா கவியே 'தகனம்' எனும் தலைப்பினைக் கொடுத்து காவியத்தை ஆரம்பிக்கும்படி முருகையனிடம் வேண்டியுள்ளார். "இதனை என் நண்பர் மஹாகவியும் நானுமாக மாறி மாறி எழுதினோம். இது 'தேனருவி' எனும் சஞ்சிகையில் ஐந்து மாதங்களாகத் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருந்தது. அன்றைய ஈழத்து இலக்கியகாரர்கள்

பலரும் இதனை அக்கறையுடன் வாசித்து வந்தனர்" என்று முருகையன் (2000:273) குறிப்பிட்டுள்ளார்.

நூறு பாடல்களைக் கொண்ட இந்தக் காவியம் சதுரங்கம், மனிதர்கள், காம காமியர், காமனும் கடவுளரும், தகனம் எனும் ஐந்து இயல்களைக் கொண்டமைந்துள்ளது. மஹா கவியின் வேண்டுகோளுக்கு இணங்க முதலாவது இயலாகிய 'சதுரங்கம்' என்னும் இயலை முருகையனே எழுதினார். இருவரும் மாறி மாறி எழுதுகின்ற புதுமை யினையும் முதன் முயற்சியினையும் இருவரும் சேர்ந்து மேற்கொள்கின்றனர். சதுரங்கம் எனும் இயல், பதினைந்து பாடல்களைக் கொண்டது. அனைத்து உலகும் ஒழிந்து போகும் சர்வ சங்கார காலத்தில் சக்தியாகிய பார்வதியும் சிவனிலே போய் ஒடுங்குகிறாள். பிறகு அடுத்த சுற்றுத் தொடங்குகிறது. மறுபடியும் தாண்டவக் கோனாகிய சங்கரன் உடுக்கையை ஒலிக்கின்றான். ஓம்.. ஓம்...என்று பிரணவம் முழங்குகிறது. 'பரம சைவத்தி'யாகிய பார்வதி பாட்டொன்று பாடுகின்றாள். பிரபஞ்சம் விரிகின்றது. உயிரினங்கள் தோன்றுகின்றன. அப்பனும் அம்மையும் அமைதியாக அமர்கிறார்கள். பின்னர் சதுரங்கம் ஆடத் தொடங்குகிறார்கள். பார்வதி மண்ணு லகத்துப் பிறவிகளை விண்ணில் இருந்தபடி கீழ்நோக்கிப் பார்க்கின்றாள்.

"அண்ட கோடி அனைத்தும் ஒடுங்கிய
அந்த வேளை அதற்குச் சிறிது முன்
சண்டகோர அழிப்பு வெறியொடும்
சங்கரித்த சமயத்து நாள்களோ
துண்டம் ஆயின தூள் துகள் ஆயின
துகள் தகர்ந்து துகட்டுகள் ஆயின
கண்ட நீலன் கருதிடு முன்னரே
கால சூத்திரக் கட்டும் அறுந்தது" (முருகையன், 2021:167)

இரண்டாவது இயலை மஹாகவி எழுதியுள்ளார். அது 'மனிதர்கள்' என்ற தலைப்பில் வருகின்ற இருபது பாடல்களைக் கொண்ட பகுதி. மூன்றாவது இயலான 'காம காமியர்' எனும் பகுதியினை முருகையன் எழுதியுள்ளார். இதில் காமனும் காமியும் (மன்மதனும் ரதியும்) வருகின்றார்கள். காமன் யார், அவன் தொழில் என்ன, காம காமியர் காதலரிடையே பாலியல் உணர்வை எப்படித் தூண்டுகிறார்கள் என்பவற்றை யெல்லாம் புராண மரபுக்கு உட்பட்டுநின்று வெளிப்படுத்தி நிற்கின்றார். காம காமியரிடைய ஏற்படும் கூடலும் ஊடலும் தத்ரூபமாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

"கிளர்ந்தன மேனி மங்கை
கேள்வனின் தோளிற் சாய்ந்தாள்
வளர்ந்தன அங்கம் யாவும்
மருண்டன விழிகள் நான்கும்
தளர்ந்தன ஆடை நின்று
தயங்கின கனிவு மிஞ்சிக்
குளிர்ந்தன மொழிகள் அன்னார்
கூடினோர் ஆயினார்கள்"

(முருகையன்,2021:182)

இவ்வாறு மன்மதனும் ரதிதேவியும் பூ லோகத்தில் உள்ளோர்க்குக் காம உந்துதலை ஏற்படுத்த விழைகின்றனர்.

நான்காவது இயலாக 'காமனும் கடவுளும்' எனும் பகுதியினை மஹாகவி எழுதி யுள்ளார். ஐந்தாம் இயல் முருகையனின் தகனம். இது பத்துப் பாடல்களைக் கொண்ட நிறைவுப் பகுதி. காமனை தனது நெற்றிக் கண்ணினாலே சிவபெருமான் ஏறிட்டுப் பார்க்க காமன் சாம்பல் ஆகின்றான். மண்ணுலகத்துக் கோயிலின் புழுக்கத்தில் இருந்து தப்புவதற்கென்று வெளிப்புறமாக வந்து இளைப்பாறிக் கொண்டிருந்த இளைஞனின் படிமமும் கைலைச் சூழலில் காமனை எரித்த பரமனின் படிமமும் ஒன்றன்மீதொன்று படிந்து கொள்கின்றன.

ஆண் பெண் உறவு நிலையினைப் புலப் படுத்தும் கதையாகவும் ஆற்றுகையாகவும்

பயிலப்படுகின்ற 'காமதகனம்' என்னும் புராணக் கதைக்குப் புதுமெருகூட்டி பாடப்பட்டது எனப் பொதுவாகக் கூறினாலும் பழைய புராணக் கதையிலிருந்து வேறுபட்டதாய் சிவன் பார்வதி, காமன் காமி ஆகியோர் பாத்திரங்களாக வருதலும் சிவன் காமனை எதிர்த்தலும் அவன் ரதிக்கு மட்டும் காட்சிதரும் வண்ணம் வரமளிக்கப்படுதலு மாகிய பகுதிகளை மட்டுமே புராண கதையாகக் கொண்டுள்ளது. அதற்கப்பால் காமன் எரிக்கப்பட்டதன் நோக்கம், எரிக்கப்படும் அளவுக்கு அவன் செய்த தவறுகள் என்பன யாவும் கவிஞர்கள் இருவரதும் கற்பனையே. நடைமுறை உலக கருப்பொருள் ஒன்றை புராணக் கதை மரபு சார்ந்து இவர்கள் கூற முற்பட்டனரேயன்றி புராணக் கதையை முழுமையாக தழுவி இக்காவியத்தை படைக்கவில்லை. அந்த வகையில் இக்காவியம் தனித்துவம் பெற்று விளங்குகின்றது.

சிவன் - பார்வதி என்போருக்கு இடையில் நிகழும் காதல், காமன் - காமி (ரதி) என்பவருக்கு இடையில் நிகழும் காதல், மனித நாகரிக வளர்ச்சியில் ஆண் பெண் இருபாலருக்கிடையில் நிகழும் காதல் என காதல் உறவுகள் விபரிக்கப்பட்டிருக்கின்றன. மனித நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில் வாழ்ந்த மனிதன் பாலியல் உணர்வை ஒரு வரப்பிரசாதமாகவே எண்ணுகிறான். அதன் பயன் குழந்தை பிறத்தல் எனக் கருதுகிறான். இறைவனுக்கு நன்றி செலுத்துகிறான். தங்களுடைய நோக்கம் நிறைவேறிவிட்டதாக சிவனும் பார்வதியும் மகிழ்வடைகின்றனர்.

ஆனால் நாகரிக வளர்ச்சியில் பாலியல் உணர்ச்சியின் உண்மையான நோக்கம் மறைக்கப்பட்டு அதன் புனிதம் கேள்விக்கு உள்ளாக்கப்படும் நிலையை இக்காவியம் காட்டுகின்றது. மனித குலத்தின் பாலியல் உணர்வை வளர்க்க, நெறிப்படுத்த இறைவனால் படைக்கப்பட்ட காம காமியர் பூவுலக வரையறை கடந்த காம உணர்வைக் கட்டுப்படுத்த முடியாது திணறுகின்றனர். தமது பொறுப்பை மறந்து காம காமியரும் தவறிழைக்க விழைகின்றனர். அன்பு நிறைந்த காமியை ஒதுக்கிவிட்டு உலக இன்பத்தை விரும்பும் காமனை சிவன் காம தகனம் செய்கின்றார்.

"ஏனைய குறுங்காவியங்களுடன் ஒப்பிடும் போது இரு கவிஞர்களும் ஒருவர் மற்ற வருக்குச் சளைக்காது எழுதவேண்டும் என்ற வேகத்துடன் எழுதியதால் அக் காவியத்தில் பயின்று வரும் மொழி புதிய வேகமும் வீச்சும் கொண்டதாக அமைந் துள்ளது" (குமரன், 2013:231). இந்தக் காவிய நடையில் புதிய வீச்சும் நுட்பமும் தனித்துவமும் வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது. பாலியல் சார்ந்த விடயங்களை நயத்தக்க முறையில் நின்று அதனை வெளிப்படுத்தி யிருக்கின்றனர். மஹாகவி, முருகையன் ஆகிய இரு ஆற்றல் வாய்ந்த கவிஞர்களின் ஆளுமைகளின் சங்கமமாக இது அமைந்துள்ளது (நு.்.மான், 2000:ix). இந்த வகையில் இருவரும் சேர்ந்து பரிசோதனை முயற்சியாக எழுதிய 'தகனம்' உருவ உள்ளடக்க ரீதியாக ஈழத்துத் தமிழ்க்காவிய மரபில் குறிப்பிடத்தக்க ஒரு படைப்பாகும்.

**நெடும்பகல்**

முருகையனின் 'நெடும்பகல்' எனும் கவிதைத் தொகுப்பு 1967 இல் வெளிவந்தது. முருகையனின் உதிரிக் கவிதைகள் அடங்கலாக 'நெடும்பகல்' என்னும் அவரது நவீன காவியமும் அதில் இடம் பெற்றுள்ளது. அக்காவியத்தின் பெயரே அக் கவிதைத் தொகுப்பின் பெயராகவும் அமைந் துள்ளது. அதில் முருகையனுடைய 40 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இதனைத் தொகுத்து உதவியவர் மஹாகவி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நெடும்பகல், விடிவு, காலை, முற்பகல், நண்பகல், பிற்பகல், அந்திமாலை, இருட்டு எனும் ஏழு பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. விடிவு என்னும் பகுதியில் உலகம் தோன்றிய வரலாறு பேசப்படு கின்றது. சூரியனுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒரு உரையாடலின் வழி பல விடயங்களை விபரித்திருப்பது புதிய உத்தி முறையாக உள்ளது. உலகம் தோன்றி மனிதன் வளர்ச்சியுற்ற தன்மையினை சூரியன் நினைத்துப் பார்க்கின்றான். சூரியனால் தனக்குக் கிடைக்கும் நன்மைகளை எல்லாம் எண்ணி சூரியனை மனிதன் வாழ்த்து கின்றான். மனிதன் நாகரிகமுற்று வளர்ந்து நிற்கின்ற நிலையை எண்ணிய சூரியன் நகர்ந்து செல்கின்றான்.

மனிதன் தனது சிந்தனைத் திறத்தினாலும் பேராற்றலினாலும் விஞ்ஞான வளர்ச்சியி னாலும் பல்வேறுபட்ட வசதிகளைப் பெற்று ஒரு கட்டத்தில் சோர்ந்து இருளில் மூழ்கி விடுகிறான்.

“ஆவலோடு காத்திருந்தார்
அவர்கள் அங்கே ஒளி கூட்டத்
தீவம் இல்லை யானாலும்
‘தென்பு’ மிகுந்து நெஞ்சகத்தே
மேவி விளக்காய் மின்னிய தவ்
விளக்கின் ஒளியை மங்காமல்
காவல் காத்தார் இரு பேரும்
காலம் மெல்ல நகர்கிறது”
(முருகையன்,1967:104)

விஞ்ஞானப் பட்டதாரியான முருகையன் கலை உணர்வோடு விஞ்ஞான அறிவும் ஒருங்கு வாய்க்கப் பெற்றவர் என்பதை இப்படைப்பு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. வெடிகுண்டுகளும் விசக்காற்றுகளும் அணு ஆயுதங்களும் மலிந்த உலகத்தில் அஞ்சிக் கொண்டிருக்கும் இன்றைய நாளில் விஞ்ஞானத்தின் ஒரு அம்சமான அழிவுச் சக்தி நுண்ணுணர்வினர் பலரை நோகச் செய்துள்ளது. அத்தகைய இதயக் குமுறல்களை முருகையன் நெடும்பகலாக விபரிக்கின்றார்.

“மனித நாகரிக வளர்ச்சியையும் இயற்கையின் ரகசியங்களை அறிந்து அவற்றை அடக்கி ஆளும் தன்மையையும் கோடு காட்டும் மனித புராணம்” என கைலாசபதி (1967:ix) குறிப்பிடுகின்றார். கட்டுப்பாட்டின்மையும் அன்பகத்தில்லாப் பண்பும் அமரனாக வேண்டிய மனிதனை ஆழக் கீழே விழுத்துவதையே ஒரு சிறு கற்பனைக் காவியமாகப் பாடியுள்ளார். மனித முன்னேற்றத்தின் படிகளைப் பல்வேறு சிறுபொழுதுகளாக உருவகித்து இருளில் வந்து விழும் மனிதனை காட்சிப் பொருளாகக் காட்டுகின்றார். உயிர் அசைவில் இருந்து உலகம் உயிர்த்த வரலாற்றை கூறும் போதும் விஞ்ஞான விந்தைகளைக் கூறும் போதும் எளிமையான தமிழில் கூறியுள்ள மையைக் காண முடிகிறது.

விஞ்ஞான கற்பனைப் புனைவுகளுக்குள் அடங்கும் நவீன தமிழ்க் காவியங்களின் வரிசையிலே இரண்டு காவியங்களை நுஃமான் கோடிட்டுக் காட்டுகின்றார். முருகையனின் நெடும்பகல் மற்றது மஹா கவியின் கந்தப்ப சபதம். “இவை இரண்டையும் மேலோட்டமாகப் பார்க்கும் போது இவை நடைமுறை உலகுடன் சம்பந்தமற்றவை என்று தோன்றக்கூடும். இவற்றை ஆழ்ந்து நோக்கினால் துரிதமான விஞ்ஞான அபிவிருத்தியும் இயந்திர நாகரிகத்தின் வளர்ச்சியும் ஏகாதிபத்திய அணு ஆயுதக் கெடுபிடியும் மிகுந்த இன்றைய நவீன உலகிலே எதிர்கால மனிதனைப் பற்றிய அச்சத்தின் பிரதிபலிப்புகளே இவை என்பதை காணலாம். இவை இரண்டும் முன்னு தாரணமற்ற படைப்புகளாகும். நவீன விஞ்ஞான அபிவிருத்தியிலும் இடையறாத மனித முன்னேற்றத்திலும் இவை அவ நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன என்ற

வகையில் இவ்விரு படைப்புக்களைப் பற்றியும் நமக்கு கருத்து வேறுபாடுகள் இருப்பது நியாயமானது. ஆயினும் இவற்றின் இலக்கிய முக்கியத்துவத்தை யாரும் மறுக்க முடியாது" (நு.ஃமான், 2021:238).

**ஆதி பகவன்**

'ஆதி பகவன்' 1978 இல் வெளியானது. 36 பக்கங்களைக் கொண்ட 'ஆதி பகவன்' என்கின்ற இவரது நவீன காவியப் படைப்பு ஒரு குடும்பத்தின் கதையாக அமைந்திருப் பினும் அது ஆளும் வர்க்கத்தினால் உலகம் சுரண்டப்படுகின்ற தன்மையினை விவரிக் கின்றது. குடியிருப்பு, புகழ் விழா, முதலாண்மை, சந்திப்பு, சச்சரவு, தாக்குதல், தீர்ப்பு, துளிர்ப்பு எனும் எட்டுப் பகுதிகளாக இக்காவியத்தினைப் படைத்துள்ளார்.

இந்நூலின் தோற்றம் பற்றி முருகையன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "சில ஆண்டுகளின் முன் ஆணல்டு வெஸ்கர் என்னும் நாடக ஆசிரியரின் கட்டுரை நூலொன்றில் ஓர் உருவக் கதையைப் படிக்க நேர்ந்தது. ஆதாம் ஏவாள் பற்றிய கதை ஒன்றைப் புனைந்து கூறி பிரித்தானிய மக்களின் வாழ்நிலையை உணர்த்தி யுள்ளார் வெஸ்கர். இரண்டு பக்கங்களுள் அடங்கும் அவ்வுருவகக் கதையே ஆதி பகவன் என்னும் இந்நெடுங் கவிதையின் வித்து. ஆயினும் இது முற்றிலும் வேறான தொரு வகையில் வளர்ந்து சென்றுள்ளது எனலாம்" (முருகையன்,1978: iii).

ஆதி என்கின்ற குடும்பத் தலைவியையும் பகவன் என்கின்ற குடும்பத் தலைவனையும் கொண்ட குடும்பத்தின் ஒரு கதையாக இது விரிகின்றது. ஆதியின் தோற்றம், அவளது அழகு, அவளைக் கண்டு பகவன் காதல் கொள்ளுதல், இருவரும் இணைந்து வாழ விரும்புதல், வீடு அமைத்து வாழ முற்படுதல், குழந்தை பிறத்தல், குடும்பத்தைக் காப்பதற்காகப் பகவன் விவசாயத்தில் ஈடுபடுதல் போன்ற சம்பவங்களைக் குடியிருப்பு என்னும் முதற் பகுதி விபரித்துச் செல்கின்றது. இதனூடாக மனித வர்க்கம் தோன்றி வளர்ந்த வரலாற்றினைக் கூற முற்படுகின்றார்.

புகழ் விழா எனும் அடுத்த பகுதியில், பகவன் விவசாயத்தின் மூலம் நல்ல நிலையினை அடைகின்றான். ஓர் ஆண் பிள்ளையும் பிறந்துவிடுகின்றது. நலச்சனக் கட்சி என்கின்ற அமைப்பின் செல்லை யாவும் கனகரும் பகவனின் உழைப்பினைப் பெருமைப்படுத்த விழா எடுத்துக்கின்றனர்.

பகவனின் உழைப்பின் ஒரு பகுதியினைப் பெற்று தொழிற்சாலை ஒன்றினை அமைத்து தாம் முன்னேற்றம் காண்பதே இவர்களது திட்டம். பகவன் கடும் உழைப்பினில் மூழ்கிவிட்டான். தொழிற்சாலையில் மக்கள் சிறுதொகைச் சம்பளத்துக்காக வேலை செய்கின்றனர். கடன் பெற்று வாழ்கின்ற ஒரு நிலைக்கு அவர்கள் வருகின்றனர். தொழிற்சாலையிலிருந்து எந்தச் சுகத் தையும் ஆதி பகவன் குடும்பத்தினர் அனுப விக்காத நிலையில் கனகர் வசதி வாய்ப்புக்களோடு வாழ்கின்றார்.

இவ்வாறு இருக்கின்ற காலத்திலே ஆதி பகவனுக்கு பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்து விடுகின்றன. குடும்பம் மிகவும் அல்லலுற்று வருந்துகின்றது. பட்டினியால் வாடுகின்றது. பகவனின் மகன் சயந்தன் கனகரை சந்தித்து தமது நிலையினை விளக்குகின்றான். ஆனால் சயந்தன் கனகரால் விரட்டப்படுகிறான். ஐந்து ஆண்டுகள் இவ்வாறு கழிந்தன. செல்லையா கனகர் ஆகியோர் இனிதே வாழ்வினை நடத்துகின்றனர். மாரி பொய்த்தது. பஞ்சம் எங்கும் பரவியது. மக்கள் புரட்சியில் ஈடுபடுகின்றனர். பகவன் குடும்பம் கனகரால் இன்னற்படுகின்றது. பகவன் கனகரைச் சந்தித்து அவரை

வைகின்றான். கனகரால் பகவன் தாக்கப்படுகின்றான். கனகர் ஆணையால் பகவன் கைது செய்யப்படுகின்றான். நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பகவன் சிறை செல்கின்றான். பகவனுடைய பிள்ளைகள் இந்த வீழ்ச்சியிலிருந்து உயர்வதற்கு சிந்திக்கின்றனர். இந்நிலையில் இந்தக் காவியம் நிறைவடைகின்றது.

"பின்னரும் இரவும் பகல்களும் உருளும்
மாரியும் கோடையும் பெயரும்
..................................................
பெயர்ச்சியின் வழியில் முயற்சிகள்
அடுக்காய்ப் பின்னரும் பின்னரும் நிகழும்
உயர்ச்சியை நோக்கிப் பலதிசைப்படும்
ஒரு பெரும் இயக்கமே தொடரும்
அயர்ச்சியால் எதுவும் நன்மையே இல்லை"
(முருகையன்,1978:36)

முருகையன், தனிமனிதக் குடும்ப வரலாற்றினூடாக, மனிதவர்க்கம் உருவாகி அது வளர்ந்து வருகின்ற நிலையில் அதிகார வர்க்கத்தினர் தோற்றம் பெற்று மக்களைச் சுரண்டி தாம் இனிது வாழுகின்ற உலக நிலைமையினை எடுத்துக்காட்டி மக்களிடையே சிந்தனையைத் தூண்ட விழைகின்றார்.

**அது - அவர்கள்:**

'அது - அவர்கள்' எனும் காவியம் 1986 இல் எழுதப்பட்டது. இருநூறு நேரிசை வெண்பாக்களினாலானது. மனித வாழ்வில் பலர் நெஞ்சத்தில் எழும் சிந்தனைகள், அனுபவங்கள், அடிக்கடி பலரும் மேற்கொள்ளும் முயற்சிகள், இக்காவியத்தில் கூறப்பட்டுள்ளன. மக்களின் எண்ணங்களும் செயல்களும் இலட்சியங்களும் நடைமுறைகளும் இக்காவியத்தின் உள்ளடக்கமாய் அமைந்துள்ளது எனக் கூற முடியும்.

இது விசாலமான பெரியதொரு காலப் பரப்பினை அளாவி நிற்கின்றது. உலகத்துக்கும் உயிர் வாழ்க்கைக்குமுள்ள தொடர்பு குறித்த விசாரமாகவும் இக் காவியத்தினை நாம் பார்க்க முடியும். "தமிழ் நாட்டிலே பெரிதும் பயிலும் சில தத்துவ எண்ணக்கருக்கள் சமுதாயத்தில் எவ்வாறு முளைகொண்டு இருக்கலாம் என்பது பற்றிய சில அனுமானங்களும் இங்கு உணர்த்தப்படுகின்றன"(தணிகாசலம் மற்றும் தேவராஜா,1986). இந்த வகையில் மறுபிறப்பு, வினைப்பயன், தான் - தனது என்னும் செருக்கு ஆகியவை பற்றி இக்காவியத்தின் தொடக்கப் பகுதிகள் சில விசாரம் செய்கின்றன. இவ்வித விசாரங்கள் முதலாம் காண்டமாகிய தேடலில் வருகின்றன. இவை தத்துவ நிலைப் பட்டனவாய் உள்ளன. இவ்விசாரங்களில் ஈடுபடும் மனிதர்கள் முதிர்ச்சி பெற்ற உச்ச நிலையிலே தத்துவஞானிகளாகப் பரிணமிக்கிறார்கள். தத்துவ ஞானியைப் பொறுத்த வரையில் இயல்பான உலக அனுபவம் அவனை வழிநடத்துகிறது. புத்தியும் உள்ளுணர்வும் பொதுமதியும் நியாயிப்பும் மனத்தின் பல்வேறு தளத்துச் செயற்பாடுகளும் இணைந்து கொள்கின்றன. இத்தகைய விடயங்களை முதலாவது காண்டத்தில் கோடி காட்டப்படுகின்றன.

இரண்டாம் காண்டமாகிய தேறலில் வேறொரு அணுகுமுறை தொடங்குகின்றது. அனுபவங்களைத் தாங்கிக் கொள்ளும் அதாவது பாடுபடும் ஒரு நலிந்த வெற்றுப் பொருளாகப் பணிசெய்து கிடந்துவிடாமல் அனுபவங்களை எதிர்நோக்கி, முகம் கொண்டு சூழலைத் தாக்கியும் அதனாலே தாக்கமுற்றும் அதனை வசப்படுத்தும் முனைப்பும் செயலூக்கமும் கொண்ட ஒருவனாக மனிதன் மாறத் தொடங்குகிறான். அனுபவங்களை எதிர்கொள்ளுதல் மட்டுமின்றி அவற்றைத் தேடிச் சென்றும் அவற்றை முயன்று உருவாக்கியும் பரிசீலனையும் பரிசோதனையும் செய்யும் போக்கு படிப்படியாக வலிமை பெறுகிறது. இந்தப் பரிசோதனையும் பரிசீலனையும்

தொடக்க காலங்களில் சடவுலகைச் சார்ந்தனவாகவே பெரிதும் அமைகின்றன. அவ்வித காலகட்டங்களில் இயற்கை விஞ்ஞானியின் செல்வாக்கு அதிக மாகின்றது. விஞ்ஞான விளக்கங்களும் தொழினுட்பச் சாதனையும் பெருமதிப்புப் பெறுகின்றன. விஞ்ஞானி முதன்மைப்படுகிறான்.

பிறிதொரு காலகட்டத்தில் விஞ்ஞான அணுகுமுறை சமூக இயங்கியலுக்கும் பிரயோகமாகிறது. இயங்கியல் முறையிலே சமூகப் பிரச்சினைகளும் வர்க்கபேதமும் உராய்வுகளும் இசைவுகளும் முரண்பாடு களும் இணக்கங்களும் போரும் அமைதியும் அணுகப்படுகின்றன. இதன் பேறாக அரசியல் சமூக இயக்கங்கள் கூர்மையும் முதன்மையும் பெற்று வருகின்றன. போராளிகளின் பணி அழுத்தம் பெறுகின்றது.

தத்துவஞானி, விஞ்ஞானி, போராளி இந்த மூவரின் கூட்டுறவினாலேதான் மனித குலத்துக்கு முழுமையான வளர்ச்சி மார்க்கம் புலப்படுத்தப்பெறும். இந்த மூவரினதும் சேர்க்கை ஆரோக்கியமானது. இந்தக் கலந்துறவை அடிக்கருத்தாக்கி எழுதப்பட்டதே ‘அது - அவர்கள்’ என்னும் இக்காவியம் எனலாம்.

அது என்பது உலகம் இயற்கை பிரபஞ்சம். அவர்கள் என்பது மனிதர்கள். உலகில் மனிதர்களின் வாழ்வு - உலகும் மனிதர்களும் பூணும் உறவு காவியத்தில் பேசப்படுகின்றது. இந்த உறவின் மெய்மையான தன்மையைச் சரியாக விளங்கிக்கொண்டு அந்த விளக்கத்தின் பேறாக விதிகளைத் தகுந்த வகையிலே பிரயோகித்து, நடைமுறைகளை அனுபவங் களின் துணை கொண்டு செம்மைப்படுத்திச் செல்லும்போது புதிய உறவுகளும் புதிய உலகமும் படைக்கப்படும். இவ்வாறான சமுதாய மறுபடைப்பை அவாவியதாகவே இக்காவியம் அமைகின்றது.

“மூப்பும் நரையும் முடக்கமுந்தான்
சீவியத்தின் வார்ப்பு முறைமை -
வரலாறு
தேய்ப்புண்டு
சீரழிந்து போதல் உடம்பின் கதி
என்றால்
ஆர் விரும்பல் கூடும் அதை”
(முருகையன்,1986:25)

“ஏறி உச்சம் எய்தி இறங்கிக் குறைவது
தான்
போலுமிந்த வாழ்வினது போக்கு வழி
ஆறி
இருந்தென்ன கண்டோம்?
இரை தேடி ஓடி
விரைந்தென்ன கண்டோம்?
விடு” (முருகையன்,1986:26)

என்பன போன்ற தத்துவ விசாரத்தின் ஆழமான தேடலினைக் காணமுடிகிறது. சாதாரண அனுபவத்தில் பிள்ளையார் சுழியிட்டு ஆரம்பித்து இயற்கையின் எழுகைத் தோற்றத்தை,

“பைய நகரும் பகலெல்லாம்
பல்லுயிர்கள்
உய்ய விழையும் உழைப்பாலே
மெய் வருந்தி
உண்டி பெறவும் உடை பெறவும் பாடு
படும்...
பண்டங்கள் எய்தும் பல”
(முருகையன், 1986:2)

என மானுடவியலை இயக்கவியலோடு இணைத்து நடத்தும் தன்மையினை இங்கு காண முடிகின்றது. நிஜவாழ்க்கையில் தோன்றும் நடைமுறைச் சிந்தனைகளை சுற்றுச் சார்பு ,சூழற்சார்பு, மக்கள் தொடர்புச் சாதனங்களுடன் இயைபுபடுத்தி இவற்றுக் கிடையான மனித உறவையும் நாகரிகத்தின் வளர்ச்சியின் உச்சநிலையையும் மனித உழைப்பின் வெற்றியையும் வார்த்தைகளின் வளத்தைப் பயன்படுத்தி முருகையன்

வெற்றி கண்டுள்ளார் எனலாம். "நவயுகக் கீதை உபதேசமாக இந் நெடுங்கவிதைகள் சாசுவதம் பெற்றுள்ளன." என்கிறார் குமாரசாமி (1986).

சமூகவியலையும் மானுடவியலையும் தொடர்புபடுத்திச் சிந்தனை வளப்பலத்தின் மூலம் சமூக அமைப்பு, கலை, கலாசாரம், நடத்தை முதலியவற்றை விளங்கிக் கொள்ள வேண்டிய தேவையையும் அதனை நிறைவேற்ற, ஒழுங்குபடுத்த முயன்றதன் செழுமை வளர்ச்சியையும் பயனையும் அது -அவர்கள் என்னும் காவியம் நிறைவு செய்திருக்கின்றது எனக் கூற முடியும்.

"நான் வாழ்வதற்காகவும் மற்றவர்களை வாழ வைப்பதற்காகவும்தான் யான் பிறந்தேன் என்ற உலகளாவிய தொனியை இக்காவியத்தினூடாக இழையோட விட்டுள்ளார் கவிஞர். தத்துவஞானியையும் தகுதி நிரம்பப்பெற்ற விஞ்ஞானியையும் புதிய உலகொன்றைக் கூட்டு மொத்தமாகச் சிந்தித்துக் கண்டு அதனை அமைக்கும் போராளியையும் ஒரு புதிய தத்துவ வரலாற்றுப் பார்வையுடன் கலாரீதியான குறியீடுகளாகத் தருதலுடன் இந்த பிரச்சினைகளை வாசகன் முன் கவிதை மொழியில் நடப்பியல்புடன் எளிமைக் கோலமாக்கியுள்ளார்." (குமாரசாமி,1986). வெண்பாவை மிகச் சாதாரணமாக அதே வேளை சரளமாகவும் சொற் சிக்கனத் துடனும் செம்மையாக படைத்திருக்கின்றார். 20ஆம் நூற்றாண்டின் நவீன தமிழ்க் காவிய வரலாற்றில் 'அது - அவர்கள்' நிலைத் திருக்கும் என்பதில் ஐயமில்லை.

## முடிவுரை

முருகையன் கையாண்ட இலக்கிய வடிவங்களுள் நவீன காவியம் குறிப்பிடத் தக்க ஒன்று. இவர் எழுதிய நவீன காவியங்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் - நவீன தமிழ்க் காவிய மரபில் முதன்மை பெற்று விளங்குகின்றன. முருகையனும் மஹாகவியும் சேர்ந்து எழுதிய தகனம் ஈழத்துத் தமிழ்க் காவியமரபில் முன் உதாரணமற்ற ஒரு படைப்பாகும். இது மரபுக்கவிதையினுள் நின்றுகொண்டு அக் கால பாலியல் சார்ந்த நடத்தைப் பிறழ்வுகளைப் புதியகண்ணோட்டத்தில் நோக்கிய ஒரு படைப்பாகும். உலகத் தோற்றத்தின் பின்னர் பாலியல் உணர்வுகள் மனிதர்களிடையே எவ்வாறு மாறுபட்டு வளர்ந்திருக்கின்றன என்பதை இருவரும் சேர்ந்து ஒருவரை ஒருவர் விஞ்சும் வகையில் தத்துரூபமாகப் யாத்துள்ளனர். இன்றைய காலத்திற்கும் பொருத்திப் பார்க்கக்கூடிய ஒரு படைப்பாக விளங்குகின்றது.

'நெடும்பகல்', நுட்பமான ஒரு படைப்பாகும். மனித முன்னேற்றத்தின் படிகளை பல்வேறு சிறுபொழுதுகளாக உருவகித்து இருளில் வந்து வீழும் மனிதனை காட்சிப் பொரு ளாகக் காட்டுகின்ற ஒரு படைப்பாகும். இதனை ஒரு நூதனமான நெடும் பாடல் என்றும் "நெடும்பகல் தமிழிலேயே முற்றும் புதுமையான- வழிகாட்டவல்ல - ஈடு இணை யற்ற- கதைப்பாடல் என்று நான் நினைக்கிறேன்" என கைலாசபதி (1967:ix) குறிப்பிட்டுள்ளார்.

'ஆதிபகவன்' மனித குலத்தின் வரலாற் றையும் முரண்பாடுகளையும் முதலாளித் துவத்தின் சுரண்டலையும் எடுத்துக் காட்டுகின்ற குறியீட்டுத் தன்மையிலான ஒரு படைப்பாகும். ஒரு குடும்பத்தை மைய மாகக்கொண்டு அமைந்தாலும் மனித வர்க்க வளர்ச்சிப் போராட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தினை இது எடுத்துக் காட்டுகின்றது. பொருள்வீச்சினாலும் கலையாக்க முறைமையினாலும் சிறப்புற்று விளங்குகின்றது.

'அது - அவர்கள்', இவரது ஏனைய காவியங் களைவிடச் சற்றுக் கருத்தாழமுடைய ஒரு

படைப்பாகும். மனிதன் சிந்தனையாளனாக விளங்கி தத்துவஞானியாக உருவாகிய தன்மையையும் மறுபுறம் அனுபவங்களின் மூலம் இயற்கையைப் பரிசோதனை செய்து அறிவியலாளனாகவும் சமூக இயக்கத்தை விளங்கிக்கொண்டு போராளியாக மாறிய தன்மையையும் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. மனிதகுலம் முழுமையாக வளர்ச்சியடையவேண்டுமாயின் தத்துவஞானி, அறிவியலாளர், போராளி ஆகியோரின் கூட்டுறவாலேயே அது சிறப்பாக அமையும் என்பதை இக்காவியம் உணர்த்துகிறது.

முருகையன் தனக்குத் தாடனமான மரபுக் கவிதையினை கையில் எடுத்துக்கொண்டு அதன் உருவ உள்ளடக்கங்களிற் புதுமைகளைச் செய்தவர். “அவர் தன்னைப் புதுக்கவிதையாளரெனக் காட்ட புதுக் கவிதையிற் கைவைத்து விலகியவரல்ல. சொல்ல நினைத்ததைச் செம்மையாகச் சொல்ல அனுமதிக்கும் செய்யுள் வடிவங்களைப் போதியளவில் அறிந்த அவருக்கு அவற்றுக்கு வெளியே செய்யுள் வடிவங்களை நாடுந் தேவை எழவில்லை” (சிவசேகரம்,2018:xix) என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முருகையனின் நான்கு நவீன தமிழ்க் காவியங்களும் ஒவ்வொரு வகையில் தனித்துத் தெரிபவையாக விளங்குகின்றன. ஆன்றவிந்த தமிழ்ப்புலமை, விஞ்ஞானப் புலமை, முற்போக்குச் சிந்தனை கலந்த இவரது சிந்தனையாற்றல் என்பன இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் காவிய மரபில் முன்னுதாரணமற்ற படைப்புகளைத் தந்துள்ளன எனலாம். இந்தவகையில் நவீன தமிழ்க்காவிய மரபில் குறிப்பிடத்தக்க ஒருவராக முருகையன் விளங்குகின்றார்.

**உசாத்துணை நூல்கள்:**


கைலாசபதி,க. (1967). நெடும்பகல், முருகையன் கவிதைகள், முன்னுரை, மெற்ராஸ் -14:அமுதா நிலையம்.

குமரன், ஈ. (2013). தமிழ்க் குறுங்காவியங்கள் வரிசையில் ‘தகனம்’-ஓர் ஆய்வு நோக்கு, தவத்திரு தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு, ப.226-231, யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் மற்றும் யாழ்ப்பாண மறைமாவட்டம்.

குமாரசாமி, வே. (1986). அது - அவர்கள், முன்னுரை, கொழும்பு:தேசிய கலை இலக்கியப் பேரவை.

சிவசேகரம், சி. (2018). முருகையன் கவிதைகள், முருகையன் கவிதைகள் பற்றி, ப.xix-xxiv, வடக்கு மாகாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.

தணிகாசலம்,க., தேவராஜா,சோ. (1986). அது - அவர்கள், பதிப்புரை, கொழும்பு: தேசிய கலை இலக்கியப் பேரவை.

நாகேஸ்வரன், க. (1980). ஈழத்தின் நவீன தமிழ்க் காவியங்கள் பற்றிய ஒரு நோக்கு, ப 22:25 மல்லிகை, மலர் 140.

நு:.மான், எம்.ஏ.(பதி.).(2021). மஹாகவி காவியங்கள், நவீன தமிழ்க் காவியங்கள், பின்னிணைப்பு v , ப.229-238, யாழ்ப்பாணம்: மஹாகவி நூல் வெளியீட்டுக் குழுவுடன் இணைந்து ஜீவநதி.

நு:.மான், எம்.ஏ.(பதி.).(2021). தகனம், மஹாகவி காவியங்கள், ப.167-194, யாழ்ப்பாணம்: மஹாகவி நூல் வெளியீட்டுக் குழுவுடன் இணைந்து ஜீவநதி, கலைஅகம், அல்வாய் வடமேற்கு.

நு:.மான், எம்.ஏ.(பதி.).(2000). மஹாகவியின் ஆறுகாவியங்கள், கொழும்பு: தேசிய கலை இலக்கியப் பேரவை.

பாரதியார். (2001). பாஞ்சாலிசபதம் முகவுரை, பாரதியார் கவிதைகள், சென்னை ஸ்ரீ செண்பகா பதிப்பகம், தேனாம் பேட்டை.

முருகையன். (2000). மஹாகவியின் ஆறுகாவியங்கள், தகனம், பின்னிணைப்பு-3, ப.273-280, கொழும்பு: தேசிய கலை இலக்கியப் பேரவை.

முருகையன். (1986). அது - அவர்கள், கொழும்பு: தேசிய கலை இலக்கியப் பேரவை.

முருகையன். (1978). ஆதி பகவன், சாவகச்சேரி: அறிவழகுப் பதிப்பகம்.

முருகையன். (1967). நெடும்பகல், முருகையன் கவிதைகள், மெற்ராஸ் அமுதா நிலையம்.